நாங்கள் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் உள்ளே வரக்கூடியவர்களைத் தடுத்து நிறுத்தி அனுமதிச் சீட்டு இருக்கிறவர்களை மட்டுமே உள்ளே அனுமதிக்கக்கூடிய ஒரு வழிவகையைச் செய்ய வேண்டும். அதை ஒரு திறந்தவெளிக் கழிப்பிடமாக, மாடுகள் எல்லாம் கட்டி வைக்கக்கூடிய மாட்டுப் பண்ணையைப் போல வைத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையை உடனடியாக மாற்ற வேண்டும். இதைச் செய்வதற்கு நிதி தேவையில்லை. பொதுவாக உங்களிடம் இருக்கக்கூடிய குறைந்த பணியாளர்களை வைத்தே இதைச் சுத்தமாக வைத்துக் கொள்ளமுடியும். ஆகவே அமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அமையவிருக்கிற பிரதான வாயில்களில் காவலாளர்களை நியமித்துப் பல்வேறு துறைகளில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய அரசினுடைய பல்வேறு அதிகாரிகளையும் அழைத்து, அவர்கள் Identity Card மூலம் பரிசோதனை செய்வதற்கு தக்க ஆலோசனை செய்து முழுமையாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 83, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

83—

சம்பள விகிதம்

***15038—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் துறையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கும் ஆங்கில பொது மருத்துவர்களுக்கு ஈடான சம்பளம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

2003 மார்ச் 26]

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அலுவலர் குழுவின் 1998 ஆம் ஆண்டு பரிந்துரையின்பேரில் கால்நடைத் துறையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஊதிய விகிதம் சரியானதாகும். எனவே, கால்நடைத் துறை மருத்துவர்களுக்கு ஆங்கிலப் பொது மருத்துவர்களுக்கு ஈடான சம்பள விகிதம் வழங்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் அலோபதி மருத்துவர்கள், அதாவது எம்.பி.பி.எஸ். படிப்பு படிக்கக்கூடிய கால அளவுக்குப் படிக்கக்கூடியவர்கள். இவர்களுடைய பணி என்பது சற்று மாறுபட்டது. பேசமுடியாத ஜீவராசிகள் என்று சொல்லக்கூடிய கால்நடைகள், மிருகங்கள், பறவைகள் இவற்றுக்கு எல்லாம் சிகிச்சை அளிக்கக்கூடியவர்கள். கிராமப்புறங்களுக்குச் சென்று வரக்கூடியவர்கள். இவர்களுக்குப் போதிய ஊதியம் இல்லை என்பது நீண்ட நாளைய குறைபாடாக இருந்து வருகிறது. ஆகவே Pay Commission அடிப்படையிலான ஊதியமாக இருந்தாலும்கூட சிறப்பு நேர்வின் அடிப்படையிலே இவர்களுக்கு இன்னும் கூடுதலான ஊதியம் வழங்குவதற்கு, அவர்கள் பணி நிலையைக் கருதி ஊதிய உயர்வு வழங்குவதற்கு, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது ஊதியக் குழு அளித்த பரிந்துரையை ஒட்டித்தான் தற்போது இந்த முறை நடைமுறையில் இருக்கிறது. மூன்றாவது ஊதியக் குழுவைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாடு கால்நடை உதவி மருத்துவர் சங்கம், கால்நடை உதவி மருத்துவர்கள் கல்வித் தகுதியை வைத்து ஆங்கிலப் பொது மருத்துவர்களுக்கு இணையாக ஊதிய விகிதம் வழங்கும்படி கேட்டார்கள். கல்வித் தகுதிக்காக மட்டுமே ஒரு பதவிக்கு ஊதிய விகிதம் உயர்த்தி நிர்ணயம் செய்ய இயலாது என்றும், ஆங்கிலப் பொது மருத்துவர்களின் கடமைகளும், பொறுப்புகளும் அதிகமாகும் என்றும், அவர்களது பயிற்சி, திறமை அனைத்தும் மிகச் சிறந்ததாகும் என்றும், அதை ஒப்பிடக்கூடாது என்றும், கால்நடை உதவி

[2003 மார்ச் 26

மருத்துவர்களின் ஊதிய விகிதத்தை ஆங்கிலப் பொது மருத்துவர்களோடு ஒப்பிட வேண்டாம் என்றும் தொடர்ந்து மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது ஊதியக் குழு அப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்ததன் அடிப்படையில்தான் தற்போது இந்த முறை நடைமுறையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மீண்டும் பரிசீலிக்க என்ன செய்வது என்று அரசு ஆயும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 84, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

84—

மாவட்ட நீதிமன்றம்

***9987—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் மாவட்ட நீதிமன்றம் திருவில்லிப்புத்தூரில் இயங்கி வருவதால் அங்கு நிரந்தரமாக ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை உயர் நீதிமன்றம் அனுப்பிய முன்னுரிமைப் பட்டியலில் இத்திட்டம் இடம் பெற்றுள்ளது. மைய அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டபின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. மா. இராஜசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், திருவில்லிப்புத்தூரில் மாவட்ட நீதிமன்றம் கடந்த 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பெற்று இன்று வரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பின்னர் கடந்த கால ஆட்சியில் இந்த நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டாமல் மாறாக வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு